# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானப் பத்திரிகை

## 2024 ஆம் ஆண்டு பெப்புருவரி மாதம் 09 ஆம் திகதிய பகுதி II இற்குக் குறைநிரப்பி

*(2024.02.13 ஆம் திகதியன்று வெளியிடப்பட்டது)*


# குற்றவியல் நடவடிக்கைமுறைச் சட்டக்கோவை (திருத்தம்)

**1979 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க, குற்றவியல் நடவடிக்கைமுறைச் சட்டக்கோவைச் சட்டத்தைத் திருத்துவதற்கானதொரு சட்டமூலம்**

*நீதி, சிறைச்சாலை அலுவல்கள் மற்றும் அரசியலமைப்பு மறுசீரமைப்பு அமைச்சர் அவர்களால் பிரசுரிக்கப்படுமாறு பணிக்கப்பட்டது*


இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்தில் பதிப்பிக்கப்பெற்றது

கொழும்பு 5, அரசாங்க வெளியீட்டலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம்

**விலை : ரூபா 12.00** **தபாற் செலவு : ரூபா 150.00**

*இவ்வர்த்தமானியின் குறைநிரப்பியை www.documents.gov.lk எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

### *சட்டப்பயன்பற்றிய கூற்று*

***வாசகம் 2*** : இவ்வாசகம், (இதனகத்துப்பின்னர், "முதன்மைச் சட்டவாக்கம்" எனக்குறிப்பீடு செய்யப்படும்) 1979 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க, குற்றவியல் நடவடிக்கைமுறைச் சட்டக்கோவைச் சட்டத்தின் 185 ஆம் பிரிவைத் திருத்துகின்றது என்பதுடன், திருத்தப்பட்டவாறான அப்பிரிவின் சட்டப்பயனானது தண்டனைத்தீர்ப்பு வழங்குகின்ற நேரத்தில், குற்றஞ்சாட்டப்பட்டவரொருவர் குற்றத்தீர்ப்பளிக்கப்படுகின்ற தவறின் குற்றத்தீர்ப்புக்கு முன்னர் கட்டுக்காவலில் அவரினால் செலவிடப்பட்ட காலத்தை அவரின் தண்டனைத்தீர்ப்பினது பாகமாக நீதிவான் கருதுவதற்கு ஏற்பாடு செய்வதாகும்.

***வாசகம் 3*** : இவ்வாசகம், முதன்மைச் சட்டவாக்கத்தின் 203 ஆம் பிரிவைத் திருத்துகின்றது என்பதுடன், திருத்தப்பட்டவாறான அப்பிரிவின் சட்டப்பயனானது தண்டனைத்தீர்ப்பு வழங்குகின்ற நேரத்தில் குற்றஞ்சாட்டப்பட்டவரொருவர் குற்றத்தீர்ப்பளிக்கப்படுகின்ற தவறின் குற்றத்தீர்ப்புக்கு முன்னர் கட்டுக்காவலில் அவரினால் செலவிடப்பட்ட காலத்தை அவரின் தண்டனைத் தீர்ப்பினது பாகமாக நீதிபதி கருதுவதற்கு ஏற்பாடு செய்வதாகும்.

***வாசகம் 4*** : இவ்வாசகம், முதன்மைச் சட்டவாக்கத்திற்கு 238அ என்னும் புதிய பிரிவை உட்புகுத்துகின்றது என்பதுடன், திருத்தப்பட்டவாறான அப்பிரிவின் சட்டப்பயனானது யூரர் சபையினாலான விளக்கத்தின்பின்னர் தண்டனைத்தீர்ப்பு வழங்குகின்ற நேரத்தில் குற்றஞ் சாட்டப்பட்டவரொருவர் குற்றத்தீர்ப்பளிக்கப்படுகின்ற தவறின் குற்றத்தீர்ப்புக்கு முன்னர் கட்டுக்காவலில் அவரினால் செலவிடப்பட்ட காலத்தை அவரின் தண்டனைத் தீர்ப்பினது பாகமாக நீதிபதி கருதுவதற்கு ஏற்பாடு செய்வதாகும்.

***வாசகம் 5*** : இவ்வாசகம், முதன்மைச் சட்டவாக்கத்தின் 323 ஆம் பிரிவைத் திருத்துகின்றது என்பதுடன், திருத்தப்பட்டவாறான அப்பிரிவின் சட்டப்பயனானது நீதிவான் நீதிமன்றத்திலிருந்து மேன்முறையீட்டு நீதிமன்றத்துக்குச் செய்யப்பட்ட ஒரு மேன்முறையீட்டில், அவரது மேன்முறையீட்டின் முடிவில் கட்டளையிடப்பட்ட அவரது தண்டனைத்தீர்ப்பின் பாகமாக அவரது மேன்முறையீடு தீர்மானிக்கப்படும் வரை கட்டுக்காவலிலுள்ள மேன்முறையீட்டாளர் ஒருவரினால் செலவிடப்பட்ட காலத்தை கவனத்துட்கொள்வதற்கு ஏற்பாடு செய்வதாகும்.

***வாசகம் 6*** : இவ்வாசகம், முதன்மைச் சட்டவாக்கத்தின் 333 ஆம் பிரிவைத் திருத்துகின்றது என்பதுடன் திருத்தப்பட்டவாறான அப்பிரிவின் சட்டப்பயனானது மேல் நீதிமன்றத்திலிருந்து மேன்முறையீட்டு நீதிமன்றத்துக்கு மேன்முறையீடொன்று செய்யப்படுகின்ற தோதான சந்தர்ப்பங்களில் அவரது மேன்முறையீட்டின் முடிவில் கட்டளையிடப்பட்ட அவரது தண்டனைத்தீர்ப்பின் பாகமாக அவரது மேன்முறையீடு தீர்மானிக்கப்படும் வரை கட்டுக்காவலிலுள்ள மேன்முறையீட்டாளர் ஒருவரினால் செலவிடப்பட்ட காலத்தை கவனத்துட்கொள்வதற்கு ஏற்பாடு செய்வதாகும்.

# குற்றவியல் நடவடிக்கைமுறைச் சட்டக்கோவை (திருத்தம்)

ச.வ.- ஒ. 29/2022

## 1979 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க, குற்றவியல் நடவடிக்கை முறைச் சட்டக்கோவைச் சட்டத்தைத் திருத்துவதற்கானதொரு சட்டம்

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றத்தினால் பின்வருமாறு சட்டமாக்கப்படுவதாகுக:-

**1.** இச்சட்டம், 2024 ஆம் ஆண்டின் ஆம் இலக்க, குற்றவியல் நடவடிக்கைமுறைச் சட்டக்கோவை (திருத்தச்) சட்டம் என எடுத்துக்காட்டப்படலாம். சுருக்கப் பெயர்

**2.** (இதனகத்துப்பின்னர், ''முதன்மைச் சட்டவாக்கம்'' எனக் குறிப்பீடு செய்யப்படும்) 1979 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க, குற்றவியல் நடவடிக்கைமுறைச் சட்டக்கோவைச் சட்டத்தின் 185 ஆம் பிரிவு பின்வருமாறு இத்தால் திருத்தப்படுகின்றது: - 1979 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க சட்டத்தின் 185 ஆம் பிரிவைத் திருத்துதல்

(1) அப்பிரிவை, அப்பிரிவின் (1) ஆம் உட்பிரிவாக மீளிலக்கமிடுவதன்மூலமும்; அத்துடன்

(2) மீளிலக்கமிடப்பட்ட (1) ஆம் உட்பிரிவை உடனடுத்துப் பின்வரும் புதிய உட்பிரிவுகளைச் சேர்ப்பதன்மூலமும்:-

''(2) தண்டனைத் தீர்ப்பு வழங்குகின்ற நேரத்தில், நீதிவான், இயைபான எல்லா நிகழ்வுகளையும் கவனத்துட்கொண்ட பின்னர், குற்றஞ்சாட்டப்பட்டவர் எந்தத் தவறுக்குக் குற்றத் தீர்ப்பளிக்கப்படுகின்றாரோ அந்தத் தவறுக்கான குற்றத்தீர்ப்புக்கு முன்னதாக கட்டுக்காவலில் அத்தகைய குற்றஞ்சாட்டப்பட்டவரினால் செல விடப்பட்ட காலத்தை நீதிநெறிக் கவனத்திலெடுக்க லாம் என்பதுடன், அத்தகைய சந்தர்ப்பங்களில் கட்டுக்காவலில் அவ்வாறு செலவிடப்பட்ட கால மானது, அவரது தண்டனைத் தீர்ப்பின் பாகமாக விருப்பதாகக் கருதப்படுதலும் வேண்டும்:

ஆயின், கட்டுக்காவலில் அத்தகைய குற்றஞ் சாட்டப்பட்டவரினால் செலவிடப்பட்ட காலமானது அவரது தண்டனைத் தீர்ப்பின் பாகமாகவிருப்ப தாகக் கருதப்படாதவிடத்து, நீதிவான் அதற்கான காரணங்களைப் பதிவுசெய்தல் வேண்டும்:

ஆயின் மேலும், குற்றத்தீர்ப்புக்கு முன்னதாக குற்றஞ்சாட்டப்பட்டவரினால் கட்டுக்காவலில் அவ்வாறு செலவிடப்பட்ட காலமானது, குற்றஞ் சாட்டப்பட்டவர் எந்தத் தவறுக்குக் குற்றஞ் சாட்டப்படுகின்றாரோ அந்தத் தவறு தொடர்பில் சட்டத்தினால் பணிப்பாணை முறையான குறைந்த பட்ச தண்டனைத் தீர்ப்பொன்று விதிக்கப்படு கின்றவிடத்து, கவனத்துட்கொள்ளப்படுதலாகாது.

(3) இப்பிரிவின் நோக்கத்துக்காக, ''கட்டுக் காவல்'' என்பது விளக்கமறியல் கட்டுக்காவலில் செலவிடப்பட்ட காலம் எனப் பொருள்படும்.''.

**3.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 203 ஆம் பிரிவு இத்தால் பின்வரு மாறு திருத்தப்படுகின்றது:- முதன்மைச் சட்டவாக்கத்தின் 203 ஆம் பிரிவைத் திருத்துதல்

(1) அப்பிரிவை, அப்பிரிவின் (1) ஆம் உட்பிரிவாக மீளிலக்க மிடுவதன் மூலமும்; அத்துடன்

(2) மீளிலக்கமிடப்பட்ட (1) ஆம் உட்பிரிவை உடனடுத்துப் பின்வரும் புதிய உட்பிரிவுகளைச் சேர்ப்பதன் மூலமும்:-

''(2) தண்டனைத் தீர்ப்பு வழங்குகின்ற நேரத் தில், நீதிபதி, இயைபான எல்லா நிகழ்வுகளையும் கவனத்துட்கொண்ட பின்னர், குற்றஞ்சாட்டப் பட்டவர் எந்தத் தவறுக்குக் குற்றத்தீர்ப்பளிக்கப் படுகின்றாரோ அந்தத் தவறுக்கான குற்றத் தீர்ப்புக்குமுன்னதாக கட்டுக்காவலில் அத்தகைய குற்றஞ்சாட்டப்பட்டவரினால் செலவிடப்பட்ட

காலத்தை நீதிநெறிக்கவனத் திலெடுக்கலாம் என்பதுடன், அத்தகைய சந்தர்ப்பங்களில் கட்டுக்காவலில் அவ்வாறு செலவிடப்பட்ட காலமானது அவரது தண்டனைத் தீர்ப்பின் பாகமாகவிருப்பதாகக் கருதப்படுதலும் வேண்டும்:

ஆயின், கட்டுக்காவலில் அத்தகைய குற்றஞ் சாட்டப்பட்டவரினால் செலவிடப்பட்ட காலமானது அவரது தண்டனைத் தீர்ப்பின் பாகமாகவிருப்ப தாகக் கருதப்படாதவிடத்து, நீதிபதி அதற்கான காரணங்களைப் பதிவுசெய்தல் வேண்டும்:

ஆயின் மேலும், குற்றத்தீர்ப்புக்கு முன்னதாக குற்றஞ்சாட்டப்பட்டவரினால் கட்டுக்காவலில் அவ்வாறு செலவிடப்பட்ட காலமானது, குற்றஞ் சாட்டப்பட்டவர் எந்தத் தவறுக்குக் குற்றஞ் சாட்டப்படுகின்றாரோ அந்தத் தவறு தொடர்பில் சட்டத்தினால் பணிப்பாணை முறையான குறைந்த பட்ச தண்டனைத் தீர்ப்பொன்று விதிக்கப்படுகின்ற விடத்து, கவனத்துட்கொள்ளப்படுதலாகாது.

(3) இப்பிரிவின் நோக்கத்துக்காக, ''கட்டுக்காவல்'' என்பது விளக்கமறியல் கட்டுக்காவலில் செலவிடப்பட்ட காலம் எனப் பொருள்படும்.''.

*முதன்மைச் சட்டவாக்கத்தில் 238அ என்னும் புதிய பிரிவை உட்புகுத்துதல்*

**4.** பின்வரும் புதிய பிரிவு முதன்மைச் சட்டவாக்கத்தின், 238 ஆம் பிரிவை உடனடுத்துப் பின்னர் உட்புகுத்துவதன்மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது என்பதுடன் அது அச்சட்டவாக் கத்தின் 238அ என்னும் பிரிவாகப் பயனுறுதலும் வேண்டும்:-

*"தண்டனைத் தீர்ப்பை வழங்குதல்*

**238அ.** (1) தண்டனைத் தீர்ப்பு வழங்குகின்ற நேரத்தில், நீதிபதி, இயைபான எல்லா நிகழ்வுகளை யும் கவனத்துட்கொண்ட பின்னர், குற்றஞ்சாட்டப் பட்டவர் எந்தத் தவறுக்குக் குற்றத்தீர்ப்பளிக்

கப்படுகின்றாரோ அந்தத் தவறுக்கான குற்றத் தீர்ப்புக்குமுன்னதாக கட்டுக்காவலில் அத்தகைய குற்றஞ்சாட்டப்பட்டவரினால் செலவிடப்பட்ட காலத்தை நீதிநெறிக்கவனத்திலெடுக்கலாம் என்பதுடன், அத்தகைய சந்தர்ப்பங்களில் கட்டுக் காவலில் அவ்வாறு செலவிடப்பட்ட காலமானது அவரது தண்டனைத் தீர்ப்பின் பாகமாக விருப்ப தாகக் கருதப்படுதலும் வேண்டும்:

ஆயின், கட்டுக்காவலில் அத்தகைய குற்றஞ் சாட்டப்பட்டவரினால் செலவிடப்பட்ட காலமானது அவரது தண்டனைத் தீர்ப்பின் பாகமாகவிருப்ப தாகக் கருதப்படாதவிடத்து, நீதிபதி அதற்கான காரணங்களைப் பதிவுசெய்தல் வேண்டும்:

ஆயின் மேலும், குற்றத்தீர்ப்புக்கு முன்னதாக குற்றஞ்சாட்டப்பட்டவரினால் கட்டுக்காவலில் அவ்வாறு செலவிடப்பட்ட காலமானது, குற்றஞ் சாட்டப்பட்டவர் எந்தத் தவறுக்குக் குற்றஞ்சாட்டப் படுகின்றாரோ அந்தத் தவறு தொடர்பில் சட்டத்தி னால் பணிப்பாணை முறையான குறைந்தபட்ச தண்டனைத் தீர்ப்பொன்று விதிக்கப்படுகின்ற விடத்து, கவனத்துட்கொள்ளப்படுதலாகாது.

(2) இப்பிரிவின் நோக்கத்துக்காக, ''கட்டுக் காவல்'' என்பது விளக்கமறியல் கட்டுக்காவலில் செலவிடப்பட்ட காலம் எனப் பொருள்படும்.''.

முதன்மைச் சட்டவாக்கத்தின் 323 ஆம் பிரிவைத் திருத்துதல்

**5.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 323 ஆம் பிரிவு, அதன் (5) ஆம் உட்பிரிவில், ''அவ்வாறு கழித்த காலம்'' என்னும் சொற்களுக்குப் பதிலாக, ''கழித்த காலம்'' என்னும் சொற்களை இடுவதன்மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது.

முதன்மைச் சட்டவாக்கத்தின் 333 ஆம் பிரிவைத் திருத்துதல்

**6.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 333 ஆம் பிரிவு, அதன் (5) ஆம் உட்பிரிவில், ''கருதப்படுதல் வேண்டும்.'' என்னும் சொற்களுக்குப் பதிலாக பின்வருவதனை இடுவதன்மூலம் இத்தால் திருத்தப்படு கின்றது:-

"கருதப்படுதல் வேண்டும்:

ஆயின், மேன்முறையீட்டு நீதிமன்றம், தோதான விடயங்களில், மேன்முறையீட்டாளரொருவரின் மேன்முறையீடு தீர்மானிக்கப்படும்வரை அவரினால் கட்டுக்காவலில் செலவிடப்பட்ட காலமும், குற்றத்தீர்ப்புக்கு முன்னதாக கட்டுக்காவலில் செலவிடப்பட்ட ஏதேனும் காலமும், முதனிலை நீதிமன்றத்தினால் அவருக்குக் குற்றத்தீர்ப்பளிக்கப்பட்ட நேரத்தில் வழங்கப்பட்ட அவரது தண்டனைத் தீர்ப்பின் பாகமாகக் கருத்திற் கொள்ளப்படாத அத்தகைய காலம், அவரது மேன்முறையீடு முடிவுறுகையில் கட்டளையிடப்பட்ட அவரது தண்டனைத் தீர்ப்பின் பாகமாகக் கருதப்படுதல் வேண்டுமெனக் கட்டளையிடலாம்.".

ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில் சிங்கள உரை மேலோங்கி நிற்றல்

**7.** இச்சட்டத்தின் சிங்கள, தமிழ் உரைகளுக்கிடையே ஏதேனும் ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில், சிங்கள உரையே மேலோங்கி நிற்றல் வேண்டும்.